**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : CC.No.429/2018**
**வழக்கு சாட்சி PW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வெங்கடேஷ் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | வேலுமுத்து | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | கிருஷ்ணாபுரம் | வயது | : | 46 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Friday of 17.04.2026.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் கிருஷ்ணாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியும். எதிரி எனது மனைவி லட்சுமியின் தங்கை கணவர். சுமார் 12 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் மாலை 06.30-07.00 மணியளவில் நான் வேலைக்கு போய்விட்டு வீட்டிற்கு போனேன். அப்போது வீட்டில் கூட்டமாக இருந்தது. எதிரி கருப்பசாமி அங்கிருந்தார். அவர் என்னை பார்த்ததும் எனது நெஞ்சின் இடது பக்கம் கடித்து இழுத்து விட்டார்.(சாட்சி அவரின் இடது பக்க மார்பில் உள்ள காயத்தழும்பை காண்பித்தார்). என்னால் வலி தாங்க முடியவில்லை. என்னை கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக எனது மனைவி, நான் குடியிருக்கும் வீட்டின் உரிமையாளர் முருகேசன் என்பவரும் என்னை கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார்கள். அங்கு 15 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகாரை நான்

காவல்நிலையத்தில் வைத்து கொடுத்தேன். அந்த புகார் அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(நேரமின்மையின் காரணமாக குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.)

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.04.19 13:44:11 +0530

<u>**வாக்குமூலம்**</u>

<u>**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**</u>

<u>**வழக்கு எண் : CC.No.429/2018**</u>

<u>**வழக்கு சாட்சி PW-2**</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | லட்சுமி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சுப்பையா கோனார் | தொழில் | : | குடும்ப பொறுப்பு |
| கிராமம் | : | கிருஷ்ணாபுரம் | வயது | : | 52 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Friday of 17.04.2026.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>**முதல் விசாரணை :**</u>

நான் கிருஷ்ணாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் குடும்ப பொறுப்பு வகித்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியும். எதிரி எனது தங்கையின் கணவர். அ.சா.1 வெங்கடேஷ் எனது கணவர். எதிரிக்கும், என்னுடைய தங்கைக்கும் பிரச்சனை இருந்து வந்தது. 28.12.2014 ம் தேதி, இரவு 07.30 – 08.00 மணியளவில் நான் வீட்டிலிருந்தேன். எனது கணவர் வேலைக்கு போயிருந்தார். அப்போது வீட்டின் வெளியில் எதிரி பயங்கர சத்தமாக தகாத வார்த்தைகளால் பேசினார். நான் சிவனடியார் என்பதினால் அந்த வார்த்தையை சொல்ல விரும்பவில்லை.

நான் என்ன விஷயம் என்று கீழே வருவதற்குள் வீட்டின் உரிமையாளர் முருகேசன் எதிரியிடம் என்ன பிரச்சனை என்று கேட்டார். அப்போது நானும் வெளியில் வந்து விட்டேன். எனது கணவரும் அந்த சமயத்தில் வீட்டிற்கு வந்தார். அப்போதும் எதிரி எனது கணவரை பார்த்து தேவையில்லாமல் பேசி என்னுடைய கணவரின் மார்பில் கடித்தார். என்னையும் அடித்தார். எதிரியை விலக்கி விட்டார்கள். என்னுடைய

கணவரின் மார்பில் காயம் ஏற்பட்டதினால் அவரை ஆட்டோவில் நானும், முருகேசனும் முதலில் காவல்நிலையத்திற்கு அழைத்து சென்றோம். அவர்கள் எங்களை மருத்துவமனைக்கு போகச்சொன்னார்கள். கடையநல்லூர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு எனது கணவரை கொண்டு சென்றேன். அங்கு எனது கணவர் 15 நாட்கள் சிகிச்சை பெற்றார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(நேரமின்மையின் காரணமாக குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.)

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.04.19 13:44:20 +0530

# வாக்குமூலம்
# தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.
# வழக்கு எண் : CC.No.429/2018
# வழக்கு சாட்சி PW-3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகேசன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | திருமலையப்பமுதலியார் | தொழில் | : | உதவியாளர் (பணி நிறைவு) |
| கிராமம் | : | கிருஷ்ணாபுரம் | வயது | : | 73 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Friday of 17.04.2026.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் கிருஷ்ணாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் அரசு மருத்துவமனையில் உதவியாளராக பணிபுரிந்து பணிஓய்வு பெற்று விட்டேன். எதிரியை எனக்கு தெரியும். எதிரி கருப்பசாமி அ.சா.2 லட்சுமி என்பவரின் சகோதரியின் கணவர். அ.சா.1 வெங்கடேஷ், அ.சா.2 லட்சுமி ஆகியோர்கள் எனது வீட்டின் மாடியில் குடியிருந்து வருகிறார்கள். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் இரவு 08.30 மணிக்கு நான் வீட்டில் சாப்பிட்டு கொண்டிருந்தேன். அப்போது வீட்டின் மாடியில் சத்தம் கேட்டதால் வெளியில் வந்து பார்த்தேன். கருப்பசாமியும், அ.சா.1 வெங்கடேஷிம் சண்டை போட்டு கொண்டிருந்தார்கள். நான் எதற்கு சண்டை போடுகிறீர்கள் என்று கேட்டேன். எதிரி அ.சா.1 ஐ நெஞ்சில் கடித்ததாக சொன்னார்கள். நான் எதிரி அ.சா.1 ஐ நெஞ்சில் கடித்ததை நேரடியாக பார்க்கவில்லை. மறுநாள் கேள்விபட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 28.12.2014 ம் தேதி, சம்பவத்தன்று நானும், வெங்கடேஷ், லட்சுமி ஆகியோர்கள் வீட்டில் பேசிக்கொண்டிருந்தோம் என்றால் சரியல்ல. எதிரி வெங்கடேஷ் வீட்டிற்கு வந்து அசிங்கமாக பேசி, வெங்கடேஷை அடித்து மார்பில் கடித்தார் என்றால் சரியல்ல. நானும், கருப்பசாமி ஆகியோர்கள் எதிரியை சத்தம் போடவும் எதிரி வெங்கடேஷை பார்த்து கொலை மிரட்டல் விடுத்தார் என்றால் சரியல்ல. சம்பவத்தை நேரில் பார்த்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.04.19 13:44:27 +0530